புதுச்சேரி அரசு
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
காரைக்கால்

எண்: 105/DCK/A1/2018. தேதி: 23-02-2018.

## மாவட்ட ஆட்சியர் உத்தரவு

மீன்வளத்தைப் பாதுகாக்கும் நோக்கிலும், மீனவர்களிடையே சட்டம் ஒழுங்கு பிரச்னைகள் ஏற்படுவதை தவிர்க்கவும், கடல் மீன்பிடிப்புக்கு சுருக்குமடி மற்றும் இரட்டைமடி வலைகளைப் பயன்படுத்தக் கூடாது எனவும், 3 நாட்டிக்கல் மைல் கடல் எல்லைக்குள்பட்ட பகுதிகளில் விசைப் படகுகள் மூலம் மீன்பிடிப்பு மேற்கொள்ளக் கூடாது எனவும் புதுச்சேரி மற்றும் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. எனவே, மீனவர்கள் அனைவரும் சுருக்குமடி மற்றும் இரட்டைமடி வலைகளின் பயன்பாட்டை தவிர்க்கும் படியும், 3 நாட்டிக்கல் மைல் கடல் எல்லைக்குள்பட்ட பகுதிகளில் விசைப்படகு மூலமான மீன்பிடிப்பையும் செய்தல் கூடாது எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

இனிவரும் காலங்களில், இந்த அறிவுறுத்தலை மீறி மீன்பிடிப்பு மேற்கொள்ளும் விசைப்படகுகள் மீது, புதுச்சேரி கடல் மீன்பிடி ஒழுங்குப்படுத்தும் சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு தடைசெய்யப்பட்ட வலைகள் பறிமுதல் செய்யப்படும்.

23/2/18
மாவட்ட ஆட்சியர்

பெறுநர்

1. கிராம பஞ்சாயத்தார்கள்
2. மீனவ கூட்டுறவு சங்கம்,

நகல்:

1. காவல் துறை துணை தலைவர், காரைக்கால்.
2. கமாண்டண்ட், கடலோர காவல் படை, காரைக்கால்.
3. இயக்குனர், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, புதுச்சேரி.
4. இணை இயக்குனர் (மண்டலம்), மீன்வளத்துறை, நாகப்படிணம்.
5. உதவி இயக்குனர், செய்தி மற்றும் விளம்பரத் துறை, காரைக்கால்
6. உதவி இயக்குனர் (தெற்கு), மீன்வளத்துறை, நாகப்பட்டிணம்.
7. உதவி இயக்குனர் (வடக்கு), மீன்வளத்துறை, சீர்காழி, நாகை மாவட்டம்.
8. உதவி பொறியாளர், துறைமுக துறை, புதுச்சேரி.
9. கண்கானிப்பாளர், சுங்க துறை, நாகப்பட்டிணம்
10. ஆய்வாளர், கடலோர காவல் நிலையம், காரைக்கால்
11. ஆய்வாளர், கடலோர காவல் நிலையம், நாகப்பட்டிணம்.

புதுச்சேரி அரசு
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
காரைக்கால்

எண்: 105/DCK/A1/2018.

தேதி: 23-02-2018.

## மாவட்ட ஆட்சியர் உத்தரவு

கடலோர பாதுகாப்பினை உறுதிசெய்யும் நோக்கில், காரைக்கால் மீன்பிடித்துறைமுகம் மற்றும் அரசலாற்றில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பதிவு செய்யப்படாத தமிழக பகுதியினைச் சார்ந்த மீன்பிடிவிசைப்படகுகள் மற்றும் கண்ணாடி நுண்ணிழை படகுகளை அதன் உரிமையாளர்கள் மேற்கண்ட பகுதியினை விடுத்து, தங்களது கிராமத்திற்கு படகினை எடுத்து செல்லுமாறு இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது. மேலும் தமிழக பகுதியினை சார்ந்த தடைசெய்யப்பட்ட வலைகளான சுருக்குமடி மற்றும் இரட்டைமடி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடிக்கும் படகுகளையும் மேற்கூறிய காரைக்கால் பகுதிகளில் நிறுத்தி வைக்கப்படுள்ளதாக தெரியவருகிறது. தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்துவதும், பதிவு பெறாத மீன்பிடிவிசைப்படகுகள் மற்றும் கண்ணாடி நுண்ணிழை படகுகளை பயன்படுத்துவதும் தண்டனைக்குரிய செயலாகும்.

இந்த அறிவுறுத்தலை மீறி பதிவு செய்யப்படாத தமிழக பகுதியினைச் சார்ந்த மீன்பிடிவிசைப்படகுகள் மற்றும் கண்ணாடி நுண்ணிழை படகுகள் காரைக்கால் மீன்பிடித்துறைமுகம் மற்றும் அரசலாற்றிலிருந்து **07-03-2018** தேதிக்குள் வெளியேற்றிவிடுமாறு உத்திரவிடப்படுகிறது. இதனை மீறி நிறுத்தி வைக்கப்படும் படகுகள் மீது சட்ட ரீதியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாவட்ட ஆட்சியர்
23/2/18

**பெறுநர்**

மீனவ கிராம பஞ்சாயத்தார்கள், சந்திரபாடி, தரங்கம்பாடி, பெருமாள்பேட்டை, புதுப்பேட்டை, சின்னூர், பூம்புகார்.

**நகல்:**

1. காவல் துறை துணை தலைவர், காரைக்கால்.
2. கமாண்டண்ட், கடலோர காவல் படை, காரைக்கால்.
3. இயக்குனர், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, புதுச்சேரி.
4. இணை இயக்குனர் (மண்டலம்), மீன்வளத்துறை, நாகப்படிணம்.
5. உதவி இயக்குனர், செய்தி மற்றும் விளம்பரத் துறை, காரைக்கால்
6. உதவி இயக்குனர் (தெற்கு), மீன்வளத்துறை, நாகப்பட்டிணம்.
7. உதவி இயக்குனர் (வடக்கு), மீன்வளத்துறை, சீர்காழி, நாகை மாவட்டம்.
8. உதவி பொறியாளர், துறைமுக துறை, புதுச்சேரி.
9. கண்காணிப்பாளர், சுங்க துறை, நாகப்பட்டிணம்
10. ஆய்வாளர், கடலோர காவல் நிலையம், காரைக்கால்
11. ஆய்வாளர், கடலோர காவல் நிலையம், நாகப்பட்டிணம்.